DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 72/2021**

**Deposition of LW7 examined as PW5** Dt. 27.01.2026

| | |
|---|---|
| Name | பாலாஜி (Rtd SSI of Police) |
| Father's/Husband's Name | சின்னையன் |
| Village | ஆடுதுறை |
| Taluk | |
| Age | 64/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.01.2026

(A1,A2 present)

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 25.11.2019 ம் தேதி பாலையூர் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மகேந்திரன் த/பெ. சாமிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண். 177/2019 இதச பிரிவுகள் 294(b),323, 506(2) ஆகிய ச/பி கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட வழக்கு ஆவணங்களை மேல் விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர்களின் பார்வைக்கு வைத்தேன். அவர் விசாரணைக்கு எடுத்து கொண்டு என்னையும் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்வாக்குமூலம் என்பது ஒரு மையாலும், என்னால் செய்யப்பட்ட மேற்குறிப்பு வேறு ஒரு மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்வாக்குமூலம் என்னால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த புகார்வாக்குமூலம் புகார்தாரரால் கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல.புகார்வாக்குமூலத்தில் 2வது எதிரி மிளகாய்பொடி தலையில் கொட்டியதாகவோ, புகார்தாரரின் சட்டை காலரை பிடித்து இழுத்து சென்றதாகவோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு பின் புகார்தாரர் காவல்நிலையம் வரவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து புகார் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். புகார்தாரரிடம் மருத்துவமனைக்கு சென்றுதான் புகார்வாக்குமூலம் பெற்றேன். இந்த புகார்தாரர் மீது எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் மீது எதிரி கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இந்த புகார்வாக்குமூலமானது பின்னிட்டு அதற்கேற்றாற்போல் என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

...எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் ... படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

27-1-26

நீதித்துறை நடுவர் எண்-1
மயிலாடுதுறை